**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.P.சுபாஷினி, பி.ஏ., பி.எல்.,

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2022ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 ஆம் நாள் திங்கட்கிழமை

**ஐ.ஏ.எண்.02/2021 இன் அ.வ.எண்.180/2021**

கிணத்துக்கடவு தாலூக்கா, கோதவாடி கிராமம், கதவு எண்.2/56–ல் வசிக்கும் இந்து சுமார் 42 வயதுடைய லேட்.கந்தசாமி மகன் மகாலிங்கம்.

... மனுதாரர் / வாதி

/ எதிர் /

கிணத்துக்கடவு தாலூக்கா, கோதவாடி கிராமம், ஆலாங்காட்டுத் தோட்டத்தில் வசிக்கும் இந்து சுமார் 58 வயதுடைய சென்னியப்பகவுண்டர் மகன் பழனிச்சாமி. ... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 22.03.2022 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆஜராகியும் உள்ள நிலையில், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

மனு தாக்கல் நாள் : 19.07.2021

இம்மனுவானது, மனுதாரரின் அமைதியான சுவாதீனத்தில் உள்ள மனுச்சொத்தில் எதிர்மனுதாரர் அத்துமீறி உள் நுழைந்து இடையூறு செய்யாதிருக்க வேண்டி ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடவேண்டியும், இம்மனுமீதான விசாரணை நிறைவுபெறும் நாள் வரை எதிர்மனுதாரருக்கு எதிராக ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட வேண்டியும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## இறுதி உத்தரவு

1. முடிவில், இம்மனு அசல் வழக்கிற்கு குந்தகம் இன்றி தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

## சொத்து விபரம்

முன்பு திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோயமுத்தூர் பதிவு மாவட்டம், முன்பு பொள்ளாச்சி மாவட்டம், தற்போது கிணத்துக்கடவு வட்டம், கோடங்கிபாளையம் கிராமம்,

க.ச.107/1 ஏ நெ. பு.ஹெக். 0.39.5 க்கு சரியான பு.ஏ.0.98 க்கு தீ.ரு.1.67 இது பூராவும்,

க.ச.108/1 பி நெ. காலையிலுள்ள துரஸ்து கிணற்றிலும், ஷை கிணற்றைச் சோந்த வாரி வாய்க்கால் துறை சாமான் ஆகியவைகளில் பொதுவில் 1/8 பங்கு பாத்தியமும், சுதந்திரங்களும்,

க.ச.113/1 நெ.காலையிலுள்ள துரஸ்து கிணற்றிலும், ஷை கிணற்றைச் சேர்ந்த வாரி வாய்க்கால் துறை சாமான் ஆகியவைகளில் பொதுவில் 1/8 பங்கு பாத்தியமும், சுதந்திரங்களும்,

க.ச.113/1 நெ. காலையிலுள்ள பொதுக்கிணற்றிற்கு செல்ல 113/3 நெ. காலையில் கெட்டிசெட்டியார் வகையறா பாக பூமியில் நடுமத்தயில் தென்வடலாயும், பின் அதனைத் தொடர்ந்து க.ச.113/2 நெ.காலையில் 3,4 இலக்கமிட்டவர்கள் பாக பூமியில் நடுமத்தியில் 25 லிங்ஸ் அகலத்தில் தென்வடலாயும் அதனைத் தொடர்ந்து ஷை க.ச.113/1 நெ. காலையில் பழனிக்கவுண்டர் பாக பூமியில் நடுமத்தியில் தென்வடலாயும் ஷை க.ச.113/1 நெ.காலை பொது கிணர் வரை விடப்பட்டுள்ள தடத்தின் வழியாக 2 முதல் 4 வரை இலக்கமிட்டவர்களின் வண்டி, ஜனம், ஆள், கால்நடை, வாகனங்கள் முதலியன போகவர உண்டான தடபாத்தியமும்.

இவ்வுத்தரவு 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

P SUBHASHINI
Digitally signed by P SUBHASHINI
Date: 2022.04.12 10:46:00 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.